இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 12-09-2025


# இப்போதுதான் உ.பி. உணர்கிறது!

**100** ஆண்டுகளுக்கு முன்னால் தந்தை பெரியார் சிந்தித்ததை, 35 ஆண்டுகளுக்கு முன்னால் தலைவர் கலைஞர் சட்டம் ஆக்கியதை இப்போதுதான் உத்தரப்பிரதேச மாநிலம் உணர்கிறது. பின்பற்றலாமா எனச் சிந்திக்கிறது.

**உத்தரப்பிரதேசத்தில் திருமணமான மகள்களுக்கும் தந்தையின் சொத்தில் பங்கு அளிக்கும் சட்டம் வருகிறதாம். எவ்வளவு பின் தங்கி இருக்கிறது அந்த மாநிலம் என்பதற்கு உதாரணம் இது.**

**'இந்து தமிழ் திசை' நாளேட்டில் அதன் டெல்லி தலைமைச் செய்தியாளர் ஆர்.ஷபி முன்னா ஒரு செய்தியை எழுதி இருக்கிறார். அதைப் படிக்கும் போது தமிழ்நாட்டை, திராவிட இயக்கத்தை நினைத்துப் பெருமையாக இருக்கிறது.**

"உத்தரப்பிரதேசத்தில் வருவாய் சட்டம்-2006-ன் பிரிவு 108 (2)-ன் கீழ், நில உரிமையாளர் இறந்த பிறகு, அந்த நிலம் அவரது மனைவி, மகன் மற்றும் திருமணமாகாத மகளின் பெயருக்கு மட்டுமே மாற்றப்படுகிறது. இதில் திருமணமான மகள்களுக்கு உரிமை இல்லை. இந்த விதியை திருத்த வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக இருந்து வருகிறது.

இந்நிலையில், "திருமணமான மகள்களுக்கு அவர்களின் தந்தையின் விவசாய நிலம் உள்ளிட்ட சொத்தில் சம பங்கு வழங்குவதற்கான திட்டத்தை மாநில அரசின் வருவாய் கவுன்சில் தயாரித்துள்ளது. இதுகுறித்து அரசு அதிகாரிகள் வட்டாரம் கூறும்போது, 'முன்மொழியப்பட உள்ள திருத்தத்தில், திருமணமானவர் மற்றும் திருமணமாகாதவர் போன்ற வார்த்தைகள் பிரிவு 108-லிருந்து நீக்கப்படும். அதன் பிறகு, திருமணமான மகள்களும் மகன்கள் அல்லது திருமணமாகாத மகள்களைப் போலவே சம உரிமையைப் பெறுவார்கள். இதன்படி, வாரிசுரிமையைப் பதிவு செய்யும்போது திருமணத்தின் அடிப்படையில் எந்த பாகுபாடும் இருக்காது.' என்றனர். உ.பி. அரசின் இந்த நடவடிக்கையும் மிகப்பெரிய சமூகப் புரட்சியாகப் பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக பெண்கள் சம உரிமை மீதான முதல்வர் யோகியின் இந்த சட்டத்துக்கு உயர் சமூகத்தினர் மத்தியில் எதிர்ப்பு கிளம்பும் என எதிர்பார்க்கப்படுகிறது." என்று 'இந்து தமிழ் திசை' செய்தி வெளியிட்டுள்ளது.

**2025 ஆம் ஆண்டு செய்ய நினைப்பதை 1989 ஆம் ஆண்டே சட்டம் ஆக்கியவர் தமிழினத் தலைவர் கலைஞர். இத்தகைய உரிமை பெண்களுக்கு வேண்டும் என்று 1929 ஆம் ஆண்டே தீர்மானம் நிறைவேற்றியவர் தந்தை பெரியார் அவர்கள். அதற்கு முன்பே அதைப் பற்றி பேசத் தொடங்கிவிட்டார் பெரியார்.**

**'பெண்களுக்கு சொத்துரிமை வேண்டும்' என்ற தீர்மானம் 1927 ஆம் ஆண்டு நடந்த சென்னை மாகாண பார்ப்பனரல்லாத இளைஞர் முதலாவது மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது. 'இந்துக் குடும்பங்களில் உள்ள பெண் குழந்தைகளுக்கும் ஆண் குழந்தைகளைப் போல் சமமான சொத்துரிமை வழங்கப்பட வேண்டும். அதற்கான மசோதா நிறைவேற்றப்பட வேண்டும்' என்று அம்மாநாடு கோரிக்கை வைத்தது.**

1928 ஆம் ஆண்டு சென்னையில் பெரியார் தலைமையில் நடைபெற்ற சீர்திருத்தக்காரர்கள் மாநாட்டில், 'குடும்பச் சொத்தில் பெண்களுக்கும் ஆண்களைப் போல சம உரிமை அளிக்கப்பட வேண்டும்' என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக 1929 செங்கல்பட்டு சுயமரியாதை இயக்க மாநாட்டில் பெரிய அளவில் செங்கல்பட்டு மாநாடு நடைபெற்றது. பெண்கள் அதிகமாக வர வேண்டும், விதவைகள் வர வேண்டும் என்று பெரியார் அழைப்பு விடுத்தார். இதைப் பார்த்து ஏராளமான பெண்கள் அந்த மாநாட்டில் கலந்து கொண்டுள்ளார்கள். "பெண்களுக்கு ஆண்களைப் போலவே சமமாக சொத்துரிமையும் வாரிசு பாத்தியதையும் கொடுக்கப்பட வேண்டும்" என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பெண்களும், ஆண்களைப் போலவே அனைத்து வேலைகளிலும் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்றும் அதில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பள்ளி ஆசிரியர் வேலைகளுக்குப் பெரும்பாலும் பெண்களே நியமிக்கப்பட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனை 1989 ஆம் ஆண்டு நிறைவேற்றியவர் முதலமைச்சர் கலைஞர்.

**1989 ஆம் ஆண்டு முதலமைச்சர் ஆன தலைவர் கலைஞர் அவர்கள் 1989 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்தபோதுதான் 'பெண்களுக்கும் சொத்தில் சம உரிமை' என்ற சட்டத்தை தி.மு.க. அரசு கொண்டுவரப் போவதாக அறிவித்தார்கள்.**

7.5.1989 ஆம் நாள் சட்டமன்றத்தில் பெண்களுக்கும் சொத்தில் சம பங்கு என்ற சட்டம் நிறைவேற்றப்பட்டது. அன்றைய தினம் மிகுந்த மகிழ்ச்சியோடு முதல்வர் கலைஞர் அவர்கள் சட்டமன்றத்துக்கு வந்திருந்தார்கள். அவர் வரும் போது தன் கையில் ஆங்கிலப் புத்தகம் ஒன்றை எடுத்து வந்தார். அது நீதிக்கட்சிக் காலத்து வரலாற்று நூல். அந்த நூலில் இருக்கும் 1929 செங்கல்பட்டு சுயமரியாதை இயக்க மாநாட்டு நிகழ்ச்சிகளை முதல்வர் கலைஞர் அவர்கள் வாசித்தார்கள்.

**"இந்த தீர்மானம் நிறைவேற்றப்படும் போது எனக்கு 5 வயது தான். 60 ஆண்டுகள் கழித்து எனது 65 வது வயதில் இதனை சட்டமாகக் கொண்டு வரும் வாய்ப்பு எனக்குக் கிடைத்துள்ளது. அத்தகைய சுயமரியாதை மாநாட்டிற்கும் அடிகோலிய பெரியார் வாழ்க! அவரது வழித்தோன்றல் அண்ணா வாழ்க! என்று சொல்லி இந்தச் சட்டத்தை அனைவரும் நிறைவேற்றித் தர வேண்டும்" என்று பேசினார் முதலமைச்சர் கலைஞர்.**

1929 ஆம் ஆண்டு தீர்மானம் போட்டதற்காக பெரியாருக்கு தமிழ்நாட்டுப் பெண்கள் அனைவரும் இணைந்து 1938 இல் 'பெரியார்' என்ற பட்டத்தை வழங்கியது போல- 'மகளிர் உரிமை ஆட்சி மாண்பாளர்' என்ற பட்டத்தை திராவிடர் கழகத் தலைவர் மானமிகு ஆசிரியர் கி.வீரமணி அவர்கள், முதலமைச்சர் கலைஞருக்கு வழங்கினார்கள்.

**1950 ஆம் ஆண்டு இந்த முற்போக்குச் சட்டத்தை அண்ணல் அம்பேத்கர் கொண்டு வந்தார். ஆனால் அது பல்வேறு தரப்பினரின் எதிர்ப்பு காரணமாகத் தோற்கடிக்கப்பட்டது. ஆனால் தமிழ்நாட்டில் அதனை 1989ஆம் ஆண்டு செயல்படுத்திக் காட்டினார் முதலமைச்சர் கலைஞர்.**

பெண்களுக்கும் சொத்தில் பங்கு உண்டு என்ற தீர்ப்பை 2020 ஆகஸ்ட் 11 அன்று நீதிபதி அருண் மிஸ்ரா தலைமையிலான உச்சநீதிமன்ற அமர்வு வழங்கியது. இதன் தொடர்ச்சியாக இப்போதாவது உத்தரப்பிரதேச மாநிலம் முற்போக்காக சிந்திக்கத் தொடங்கி இருப்பதை வரவேற்போம். பழமைவாதத்தில் ஊறிப் போனவர்கள் இதனை நிச்சயம் எதிர்ப்பார்கள். எதிர்ப்பை மீறி, பெண்களுக்கான உரிமையை உ.பி.அரசு வழங்க வேண்டும்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (10.9.2025) முகாம் அலுவலகத்தில், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, அண்ணா அறிவாலய மேலாளர் ஆர். பத்மநாபன் ஆகியோர் சந்தித்து, கரூரில் 17.9.2025 அன்று நடைபெறவுள்ள "திமுக முப்பெரும் விழா 2025"–க்கான அழைப்பிதழை வழங்கினார்கள்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை 9.9.2025 அன்று தலைமைச் செயலகத்தில், மைண்ட்க்ரோவ் டெக்னாலஜிஸ் (Mindgrove Technologies) நிறுவனத்தின் இணை நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அலுவலர் டி.ஆர். சஷ்வத், தலைமைச் செயல்பாட்டு அலுவலர் உமா மகேஸ்வரன் ஆகியோர் சந்தித்து பேசினார்கள். இச்சந்திப்பின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண்ராய், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## தொழில் துறையின் அறிக்கையில் உள்ள புள்ளி விவரங்கள் புரியாமல்

# அறியாமையைக் காட்டிக்கொள்ளவே அறிக்கை வெளியிட்டிருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர்!

## தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அறிக்கை!

சென்னை, செப்.12–

தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமியின் அறிக்கைக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, "அறியாமையைக் காட்டிக் கொள்வதற்காகவே அறிக்கை வெளியிட்டிருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி என்று குறிப்பிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:–

முந்தைய அ.தி.மு.க. ஆட்சியின் 10 ஆண்டுகால சீர்கெட்ட நிர்வாகத்தால் தமிழ்நாடு என்று பெயரைக் கேட்டாலே தொழில் முதலீட்டாளர்கள் தெறித்து ஓடிக் கொண்டிருந்த நிலையை மாற்றி, முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு, கடந்த நான்காண்டுகளில் தொழில்துறையில் தமிழ்நாட்டை உயர்வான நிலைக்குக் கொண்டு வந்திருப்பதை பொறுத்துக்கொள்ள முடியாத வயிற்றெரிச்சலுடன் அறிக்கை விடும் எதிர்க்கட்சித் தலைவரின் அறியாமையைப் பார்த்து பரிதாபப்படுகிறேன்.

முதலமைச்சரின் வெளிநாட்டுப் பயணங்களால் எவ்வளவு முதலீடு வந்தது என்று 'திரும்பத் திரும்ப பேசும்' அரசியல் களத்தின் வடிவேலுவாகியிருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர். முதலமைச்சர் தன்னுடைய ஜெர்மனி, இங்கிலாந்து பயணத்தைத் தொடங்குவதற்கு முன்பே முந்தைய வெளிநாட்டுப் பயணங்களில் போடப்பட்ட ஒப்பந்தங்களில் எவ்வளவு முதலீடுகளாக மாறி, எங்கெங்கே தொழில்நிறுவனங்கள், எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு என்பதை ஊடகங்களிடம் தெளிவாக விளக்கி விட்டுத்தான் புறப்பட்டார்.

இது எதுவும் அறியாமலும் புரிந்து கொள்ளத் தெரியாமலும் சொந்தக் கட்சிப் பிரச்சினைகளால் கோமாவில் இருந்து திடீரென விழித்து, 'அன்னைக்கு காலையில 6 மணி இருக்கும். கோழி கொக்கரக் கோன்னு கூவுச்சு..' என்று எதிர்க்கட்சித் தலைவர், சொன்னதையே சொல்லிக் கொண்டிருக்கிறார். அவருடைய கேள்விகளுக்கு தொழில்துறை மானியக் கோரிக்கையிலும், அதன் பிறகு பல அறிக்கைகளிலும் தெளிவாக பதில் தரப்பட்டுள்ளது. சேக்கிழார் எழுதிய இராமாயணத்தைப் படித்தவருக்கு தொழில்துறையின் அறிக்கையில் உள்ள புள்ளிவிவரங்கள் எந்த அளவுக்குப் புரியும் என்றும் தெரியவில்லை.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், முதலமைச்சர் இதற்கு முன் பயணித்த ஐக்கிய அரபு நாடுகளில் 6 ஒப்பந்தங்கள், 6100 கோடி முதலீடு, சிங்கப்பூர் 1 ஒப்பந்தம், 312 கோடி முதலீடு, ஜப்பான் 7 ஒப்பந்தங்கள், 1030 கோடி முதலீடு, ஸ்பெயின் 3 ஒப்பந்தங்கள் 3440 கோடி முதலீடு, அமெரிக்கா 19 ஒப்பந்தங்கள் 7616 கோடி ரூபாய் முதலீடு எனப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டு, அந்த 36 ஒப்பந்தங்களில் Yield Engineering Services, Infinix Services, Rockwell Automation உள்ளிட்ட 12 ஒப்பந்தங்கள் தமிழ்நாட்டில் உற்பத்தி நிலையை எட்டிவிட்டன. 11 நிறுவனங்களின் நில எடுப்புகட்டுமானப்பணிகள் போன்றவை நடைபெற்று வருகின்றன. சென்னை, செங்கல்பட்டு, கோயம்புத்தூர், ஈரோடு, காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, மதுரை, திருச்சி மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் முதலீடுகள் செய்யப்பட்டு அங்குள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பும் அளிக்கப்பட்டுள்ளது.

அ.தி.மு.க. ஆட்சியில் போடப்பட்ட ஒப்பந்தங்களை திராவிட மாடல் அரசின் கணக்கில் எழுத வேண்டிய அவசியம் இந்த அரசுக்கு இல்லை. ஆனால், ஒப்பந்தம் போட்டுவிட்டு எதையுமே செய்யாத உங்களின் உதவாக்கரை ஆட்சியைப் போல இல்லாமல், நீங்கள் போட்ட ஒப்பந்தங்களையும் நம் தமிழ்நாட்டுக்கான முதலீடுகளாக மாற்றும் முயற்சியை முதலமைச்சர் தலைமையிலான அரசு மேற்கொண்டு வரும் நிலையில், ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் போல உங்களின் அமெரிக்கப் பயணத்தின் லட்சணம் பல்லைக் காட்டுகிறது.

2019ஆம் ஆண்டு முதலீடுகளை ஈர்ப்பதற்காக



அன்றைய முதலமைச்சராக அமெரிக்காவுக்குச் சென்ற நீங்கள் போட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் 27. இதன் மூலம் 5087 கோடி ரூபாய் முதலீடு கிடைக்குமென்றும் 24,720 பேருக்கு வேலை கிடைக்கும் என்றும் சொன்னீர்கள். ஆனால், உண்மை நிலையைத் தேடினால், ஒப்பந்தம் போடப்பட்ட ரூ.5087 கோடியில் 25% முதலீடு கூட வரவில்லை !

தமிழ்நாட்டை விட மகாராஷ்ட்ரா, டெல்லி போன்ற மாநிலங்களுக்கு அதிக முதலீடுகள் வந்திருப்பதாகச் சொல்வதிலும் உண்மையில்லை. தொழில் துறையைப் பொறுத்தவரை, அந்நிய நேரடி முதலீட்டுத் தரவுகள் என்பவை முழுமையானவை அல்ல என்பதை பல முறை தெரிவித்திருக்கிறோம். ஒரு பன்னாட்டு நிறுவனத்திற்கு இந்தியாவில் எந்த மாநிலத்தில் தலைமையகம் உள்ளதோ அந்த மாநிலத்தின் பெயரில்தான் அந்நிய நேரடி முதலீடு கணக்கு காட்டப்படும். தமிழ்நாட்டில் முதலீடு செய்யும் பன்னாட்டு நிறுவனங்களின் இந்தியத் தலைமையகம் டெல்லி, மும்பை போன்ற நகரங்களில் இருந்தால் அந்த மாநிலங்களுக்குரியதாக தரவுகள் காட்டும். ஆனால், ஒப்பந்தம் செய்த தமிழ்நாட்டிற்குதான் அந்த முதலீடு இறுதியில் நிலம், கட்டிடம், இயந்திரங்கள் என வந்தடைந்து வேலைவாய்ப்புகள் உருவாகும். இது பற்றி பல முறை தெளிவுபடுத்தியும் விளக்கம் கேட்பது விளக்கெண்ணெய்த்தனமாக இருக்கிறது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே சொன்னாலும் புரியப்போவதில்லை. சொந்தமாகவும் தெரிந்துகொள்ளப் போவதில்லை என்கிற நிலைமையில் உள்ள உங்களுக்கு வெள்ளை அறிக்கை கொடுத்தால் மட்டும் விளங்கிவிடுமா என்ன?

இறுதியாக ஒன்று, தொழில் துறை சார்ந்த விளக்க அறிக்கைகள் சமூக வலைதளப் பக்கத்தில்தான் வெளியாகிறது என்று சொல்லும் உங்களின் அறிக்கையும் சமூக வலைதளத்தில்தான் பதிவிடப்பட்டுள்ளது என்பதை அறிக்கை எழுதித் தருபவரிடம் அடுத்த முறை மறக்காமல் ஞாபகப்படுத்திவிடுங்கள்.

தமிழ்நாட்டின் தொழில்துறை வளர்ச்சி குறித்து தெளிவாகப் பல முறை அறிக்கை வெளியிட்டும் அதைப் புரிந்து கொள்ள உங்களால் முடியவில்லை. நான் சுற்றுச்சூழல் ஆர்வலர் என்ற முறையில் ஒரு வெள்ளைத் தாளை வீணடிக்க விரும்பவில்லை என்பதை, இனி பா.ஜ.க.வுடன் கூட்டணியே கிடையாது என்று சொல்லிவிட்டு மீண்டும் கூட்டணி அமைத்திருக்கும் வெள்ளைக்கொடி வேந்தருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## கோடுவெளி தங்கம் முரளி தலைமையில்

# செம்பேடு வி.செல்வம் இல்ல விழா!

### அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் திறந்து வைக்கிறார்! ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ பங்கேற்பு!

திருவள்ளூர், செப். 12 -

திருவள்ளூர் மத்திய மாவட்டம் எல்லாபுரம் மத்திய ஒன்றியம் தகவல் தொழில் நுட்ப அணி சமூக வலைத்தளம் ஒருங்கிணைப்பாளர் செம்பேடு வி.செல்வம் எஸ்.ரூபாவதி இல்ல புதுமனை புகுவிழா இன்று (12.09.2025 - வெள்ளிக்கிழமை) காலை 7:30 மணி அளவில் செம்மேடு பஜனை கோவில் தெரு கிராமத்தில் நடைபெறுகிறது.

இதில் ஒன்றிய கழக செயலாளர் கோடுவெளி தங்க முரளி தலைமை தாங்குகிறார். ஒன்றிய கழக செயலாளர்கள் பி.ஜெ.மூர்த்தி, ஆ.சத்தியவேலு, மாவட்டத் துணைச் செயலாளர் வி.ஜெ.சீனிவாசன் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள். நிர்வாகிகள் பி.ஜி.முனுசாமி, எம்.குமார், இ.சுப்பிரமணி, உமா சீனிவாசன், ஜி.பாஸ்கர், டி.பாஸ்கர், கே.ஜி.அன்பு, என். நாராயணசாமி எம்.எல். டேவிட், ஏ.சுப்பிரமணி, வி.ஸ்ரீதர், எஸ்.ஆளவந்தான், என்.தங்கராஜ், எஸ்.ரகு, என்.எம்.விஜயகுமார், வ.நாகராஜ் ஆகியோர் வரவேற்புரையாற்றுகிறார்கள்.

புதுமனை இல்லத்தை திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளரும் சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி ஆகியோர் திறந்து வைக்கின்றனர். இதில் கழகத்தினர் பங்கேற்கின்றனர்.




திருப்பூர் தெற்கு மாவட்டம், உடுமலைப்பேட்டை மத்திய ஒன்றிய செயல்வீரர்கள் கூட்டம் முக்கோணம் சூர்யா மஹாலில் ஒன்றிய அவைத்தலைவர் ஞானசேகரன் தலைமையில் ஒன்றியச் செயலாளர் க.செந்தில்குமார் வரவேற்புரையில் மாவட்ட அவைத்தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி முன்னிலையில் நடைபெற்றது. இக்கூடத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டல தலைவர் இல.பத்மநாபன் ஆகியோர் கருத்துகளை வழங்கி சிறப்புரையாற்றினர். இதில் மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், பூத் கமிட்டி நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் மாவட்ட, ஒன்றிய, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.